**ஹிக்கடுவை நகர சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மாரச் 31 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2016 டிசெம்பர் 16 ஆந் திகதியன்று நகர சபைச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து புத்தளம் நகர சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

கணக்கீட்டின்போது கடைபிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படவில்லை.

#### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கீழே காணப்படும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டில் பெற வேண்டிய முத்திரைக் கட்டணமாகிய ரூபா 2,436,032 கணக்கிடப்படவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டின் பொருட்டு, மீளாய்வாண்டில் பெறப்பட்ட நீதி மன்றக் கட்டணம் மற்றும் முத்திரைக் கட்டணமாகிய ரூபா. 648,333 ஆண்டிற்கான வருவாயாக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(இ) பிங்கந்த வெள்ளதொட்ட வீதியின் ஒரு பகுதிக்குத் தார்பூசி அதனைத் திருத்தஞ் செய்யும் வேலைக்குச் செலுத்த வேண்டிய தொகை ரூபா 471,277 ஆகும். இதற்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

#### 1.3.3 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கிய ரூபா 23,386,873 மீதி மற்றும் அவற்றுடன் தொடர்புடைய 02 கணக்கீட்டு விடயங்களது துணைப் பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காணப்படும் மீதி என்பவற்றுக்கிடையே ரூபா 3,857,093 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

#### 1.3.4 பெற வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மதீயாகிய ரூபா 41,460,247 தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 1.3.5 கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

2008 ஆம் ஆண்டு தொடக்கம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்குக் கொடுப்பனவு செய்ய வேண்டியனவாகக் கணக்குகளில் காட்டப்படும் ரூபா 221,363 முத்திரைக் கட்டணம் மற்றும் வேலைக் கடன் கொடுத்தோர் கணக்கில் உள்ள 13 மீதிகளது கூட்டுத் தொகையாகிய ரூபா 1,632,593 என்பவற்றைத் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றின்மை

நாளதுவரையாக்கப்பட்டு, பிரிவுவாரியாக்கப்பட்ட ரூபா 119,579,938 கூட்டுத்தொகையுடைய இயந்திரங்களும் உபகரணங்களும், மோட்டார் வாகனங்களும் வண்டிகளும், தளபாடங்களும் பொருத்திகளும் உள்ளடங்களாகத் தயாரிக்கப்பட்ட நிலையான வெத்துப் பதிவேடும், திருப்பிச் செலுத்த வேண்டிய ரூபா 10,069,681 வைப்புக்கள் தொடர்பான ..வரையாக்கப்பட்ட வைப்புப் பதிவேடும் பட்டோலையும், கொடுப்பனவு மறுக்கப்பட்ட ரூபா 82,267 காசோலைகள் தொடர்பான கொடுப்பனவு மறுக்கப்பட்ட காசோலைகளது பதிவேடும், ரூபா 100,000 நிலையான வைப்புக்குரிய நிலையான வைப்புச் சான்றிதழும் போன்ற சான்றுகள் சமர்பிக்கப்பட்டமையால் அவற்றைக் கணக்காய்வில் திருப்திகரமாக பரிசீலிக்க முடியவில்லை.

### 1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இனங்காமை

இலங்கைக் குடியரசின் 570 மற்றும் 571 (1) (2) நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் 02 ஆண்டுகளைக் கடந்து ரூபா 1,598,361 கூட்டுத் தொகையுடைய 393 வைப்பு மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

## 2. நிதிகள் மீளாய்வு

### 2.1 நிதிசார் பெறுபேறுகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 18,224,786 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 12,576,437 ஆகும் இதற்கமைய, மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறு ரூபா 5,648,349 அதிகரிப்பைக் காட்டுகின்றது.

### 2.2 பகுப்பாய்வினூடாக நிதிசார் மீளாய்வு

(அ) மீளாய்வாண்டினது மீண்டுவரும் வருவாய்க்கெதிரான மீண்டுவரும் செலவினம் 79 சதவீத அதிக பெறுமதியைக் கொண்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு ஆகிய இரு ஆண்டுகளிலும் வருவாய்க்கான உதவி, சுய உற்பத்தி வருவாய் மற்றும் மீண்டுவரும் செலவினம் என்பவற்றினது விபரப் பொழிப்பு பின்வருமாறு,

| ஆண்டு | மொத்த மீண்டுவரும் வருவாய் | வருவாய் உதவித் தொகை | சுய உற்பத்தி வருவாய் | மொத்த மீண்டுவரும் செலவினம் | சுய உற்பத்தி வருவாயிலும் கூடிய மீண்டுவரும் செலவினம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 87,930,762 | 39,803,296 | 48,127,466 | 69,705,976 | 21,578,510 |
| 2014 | 74,982,784 | 26,980,253 | 48,002,531 | 62,406,346 | 14,403,815 |
| 2013 | 66,231,555 | 22,914,150 | 43,317,405 | 52,889,432 | 9,572,027 |

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சகல ஆண்டுகளினதும் சபையின் வருவாய்க்கான உதவிப் பெறுவனவில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு உள்ளதைப் போன்றே சுய உற்பத்தி வருவாயிலும் சாதாரண அதிகரிப்பு தென்படுகின்றது.

(ii) சபையின் மீண்டுவரும் செலவினம் தொடர்ச்சியான வேகத்துடன் அதிகரித்த போதும், அந் நிலைமையை இனங்கண்டு அதனைக் குறைந்த அளவில் வைத்திருப்பதற்குச் சபை கவனம் மேற்கொள்ளவில்லை.

(iii) சபையின் சுய உற்பத்தி வருமானத்திற்கும் கூடுதலாக சகல ஆண்டுகளிலும் குறிப்பிடத்தக்க அளவிலான மீண்டுவரும் செலவின அதிகரிப்புத் தொடர்ந்தவாறிருந்தது.

(iv) வருவாய்க்கான உதவி கிடைக்காதிருப்பின் சபையின் வருமானத்தின் மூலம் மீண்டுவரும் செலவினத்தை ஈடு செய்வதற்கு எதுவித வாய்ப்பும் இல்லாதிருந்தமை புலனாகியது.

(இ) மீளாய்வாண்டினது உள்ளவாறான மூலதனம் பெறுவனவு ரூபா 2,063,583 ஆகும். எவ்வாறாயினும், உள்ளவாறான மூலதனச் செலவினம் ரூபா 6,730,039 ஆகியமையால் மூலதனம் பெறுவனவிலும் கூடுதலான மூலதனச் செலவினம் ரூபா 4,666,456 ஆகியது. மீளாய்வாண்டிற்கான வரவு, செலவுத் திட்டப்படி மூலதன வருவாய் ரூபா 14,608,200 ஆகவும் மூலதனச் செலவினம் ரூபா 23,640,000 ஆகவும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எனினும், மூலதனவருவாயை விட மூலதனச் செலவினம் ரூபா 9,031,800 அதிகரித்தமைக்கு எவ்வாறு நிதியளிக்கலாம் என்பது தொடர்பாக விளக்கமளிக்கப்படவில்லை.

**2.3 வருவாய் நிர்வாகம்**

**2.3.1 தீர்வை வரி**

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் இருந்த நிலுவை ரூபா 18,381,744 ஆகும். விலைப்பட்டியல் வழங்கப்பட்டிருந்த தொகை ரூபா 19,518,550 ஆகும். இவற்றுள் 42 சதவீதம் மாத்திரமே அறவிடப்பட்டிருந்தன. அதன் காரணமாக, ஆரம்ப நிலுவையானது ஆண்டின் இறுதியளவில் ரூபா 212,903,733 வரை அதிகரித்தது. எனினும், நிலுவையை அறவிடுவதற்கு நகர சபைகள் கட்டணச் சட்டத்தின் 170(2) ஆம் பிரிவை நகர சபை கவனத்திற் கொள்ளவில்லை.

**2.3.2 குத்தகை வாடகை**

மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டுகளிலும் அறவிடப்பட வேண்டியிருந்த குத்தகை வாடகையாகிய ரூபா 9,874,864 மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணமாகிய ரூபா 1,108,399 என்பவற்றுள் முறையே 39 சதவீதமும் 49 சதவீதமும் அறவிடப்பட்டிருந்தன. நிலுவையை அறவிடுவதற்கு 1988 ஆம் ஆண்டின் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 170(அ)(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

**2.3.3 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்**

மாகாணச் சபைகளின் தலைமைச் செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 11,282,536 நீதிமன்றத் தண்டப் பணமும் ரூபா 1,124,500 முத்திரைக் கட்டணமும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

#### 3.1.1 பதவியணி முகாமைத்துவம்

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 21 மிகை இருந்ததுடன் 15 வெற்றிடங்களும் இருந்தன. மிகையாகவுள்ள பதவியணியை முறையானவாறு அமைப்பதற்கோ அல்லது வெற்றிடங்களை நிரப்புவதற்கோ சபை கவனஞ் செலுத்தியிருக்கவில்லை.

#### 3.1.2 ஊழியர் கடன்

மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு இடமாற்றம் பெற்றுச் சென்ற, ஓய்வு பெற்ற, வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட 04 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 182,769 மற்றும் வேலை நீங்கிய, அமைய மற்றும் பிரதியீட்டு ஊழியர்கள் 13 பேரிடமிருந்து அறவிடப்படவேண்டிய ரூபா 39,400 என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

#### 3.1.3 கொடுப்பனவு மறுக்கப்பட்ட காசோலைகள்

2011 ஆம் ஆண்டு தொடக்கம் நிலவிவரும் ரூபா 82,267 கூட்டுத்தொகையுடைய கொடுப்பனவு மறுக்கப்பட்ட காசோலைகளைத் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

### 3.2. இனங்காணப்பட்ட இழப்புக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2006 ஆகஸ்ட் முதல் 2012 ஆகஸ்ட் வரை 35 ஊழியர்களது ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு தாமதமாகிக் கொடுப்பனவு செய்யப்பட்டமையால் ரூபா 54,714 தண்டப் பணம் செலுத்தப்பட வேண்டியதாயிற்று. எவ்வாறாயினும், அத்தண்டப்பணம் தொடர்பாகப் பொறுப்பானவர்களுக்கு எதிராக இலங்கை குடியரசின் 156(1) ஆம் நிதிப் பிரமாணத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2006 ஆகஸ்ட் தொடக்கம் 2012 ஆகஸ்ட் வரை ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியப் பங்களிப்பு தாமதமாகிக் கொடுப்பனவு செய்யப்பட்டமையால் 2011 ஆம் ஆண்டில் ரூபா 39,147 தண்டப்பணம் விதிக்கப்பட்டிருந்தது. எனினும் 2016 ஆகஸ்ட் 03 ஆந் திகதியளவிலும் அத்தண்டப்பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செயற்திட்டத் தாமதம்

2015 ஆம் ஆண்டினது தென் மாகாண சபை அபிவிருத்தித் திட்டத்தின்படி ஹிக்கடுவை நகரில் மூன்றுசக்கர வண்டிகள் தரித்து வைக்கப்படுமிடத்தில் சிறு கற்களைப் பதிப்பதற்கான செயற்திட்டத்தை அமுலாக்குவதற்கு ரூபா 150,000 பெறப்பட்டபோதும், மீளாய்வாண்டு முடிவிலும் அச்செயற்திட்டம் அமுலாக்கப்பட்டிருக்கவில்லை.

## 4 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 4.1 வரவு, செலவுதிட்டக் கட்டுப்பாடு

வரவு, செலவுத்திட்டத்தில் உள்ளடக்கிய 07 செலவின விடயங்களில் ரூபா 31,384,245 கூட்டுத்தொகை சேமிப்பும் ஏனைய 02 செலவின விடயங்களில் வலம்பிலும் கூடிய ரூபா 17,290,510 கூட்டுத்தொகைச் செலவினமும் 04 வருவாய்க்கான விடயங்களில் இலக்கினை அடையாத ரூபா 21,949,500 வருவாயும் நிலவியதுடன், சுய உற்பத்தி வருவாயில் 30 சதவீதத்தை மூலதனச் செலவினத்திற்கு ஒதுக்காமை போன்ற காரணங்கயால் வரவு,

செலவுத்திட்டமானது ஆக்கபூர்வமான நிதிமுகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படாதிருந்தது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபபா/யஹ/01/ந.வ/வே எனும் இலக்கமுடைய உள்ளுராட்சி ஆணையாளரது (தென்மாகாணம்) சுற்றறிக்கைப் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிராத போதும், நியமிக்கப்பட்டிருந்த உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டின் போது சம்பளமும் படியுமாக ரூபா 422,831 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களை அமைப்பதற்கு மீளாய்வாண்டு முடிவுவரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

### 4.4 சொத்து முகாமைத்துவம்

கீழே காணப்படும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்

(i) சபையினது வளாகத்தில் துரப்பிடித்தவாறிருக்கும் கையால் இயக்கப்படும் டிறக்டர் ஒன்றும் பெரிய டிறக்டர் ஒன்றும் பெக்கோ லொடர் ஒன்றும் 2015 யூலை 10 ஆந் தகிதிய 02/2015 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கைதவிர்ப்புச் செய்யப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது சபைக்குக் கிடைக்கப் பெற்ற ரூபா 7,967,144 பெறுமதியான அதிர்வை ஏற்படுத்தும் வீதி உருளையும் ஜீப் வண்டியும் 2014 ஆகஸ்ட் 03 தொடக்கம் பயன்படுத்தப்படாதிருந்தன. 2008 ஆம் ஆண்டின் போது பெறப்பட்ட ரூபா 34,300,000 கிரயமுடைய இடர் வாகனமும் எதுவித பயனுமின்றி இருந்தது.

(iii) சபைக்குச் சொந்தமான 03 டிறக்டர்கள், கையால் இயக்கப்படும் ஒரு டிறக்டர், டிறக்லோடர் ஒன்று என்பவற்றைப் பழுது பார்ப்பதற்கு முறையே 2013, 2014, 2015 ஆம் ஆண்டுகளில் நகர சபை கராஜில் ஒப்படைக்கப்பட்டிருந்தன. எனினும், 2016 யூலை 31 ஆந் திகதியளவிலும் அப்பழுதுபார்த்தல் வேலை முடிவடையாதிருந்தன.

(ஆ) சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

(i) சபையால் பயன்படுத்தப்படும் வேறு நிறுவனங்களுக்குரிய 14 வாகனங்களது உரித்தைச் சுவீகரிப்பதற்கு மீளாய்வாண்டு முடிவளவிலும் சபை நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(ii) கல்வி அமைச்சிற்குச் சொந்தமான 02 றூட், 36.15 பர்ச்சஸ் மஹாமாயா வித்தியாலம் அமைந்துள்ள காணியில் நகர சபை சுவீகரிப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை. எவ்வாறாயினும், இருமாடிகளுடனான பாடசாலைக் கட்டிடத்தைக் கேட்போர் கூடமாக நவீனமயப்படுத்துவதற்கும் கட்டிடத்தின் மேல் மாடியை நிர்மாணிப்பதற்கும் சபையின் நிதியிலிருந்து ரூபா 6,146,719 செலவிடப்பட்டிருந்தது.

## 4.5 தீர்த்து வைக்கப்படாத பொறுப்புகள்

நகர அபிவிருத்திக்கும் குறைந்த வருவாயைப் பெறுவோரது வீட்டுச் செயற்திட்டத்திற்குமென வடிகால் முறைமை ஒன்றை நிர்மாணிப்பதற்கு 2014 மார்ச் 31 ஆந் திகதியன்று உள்ளூர்க்கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட கடனுக்குரிய தவணைப் பணத்தைக் கொடுப்பனவு செய்வது 2009 ஆம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டமையால் மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு கொடுப்பனவு செய்ய வேண்டிய கடன்மீதி ரூபா 15,576,729 ஆகியிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே விபரிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

(இ) வருவாய் நிர்வாகம்

(ஈ) மனிதவளமுகாமைத்துவம்